1995 ஏப்ரல் 28] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எப்போதும் கருப்புத் துண்டு அணிவார்கள். ஆனால் இவர்களும் கதர்த் துண்டை எடுத்துவிட்டு, கருப்புத் துண்டைப் போட்டுக் கொண்டு வந்ததற்கு அவர்களுக்குப் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திராவிட இயக்கமே பாழாய்ப் போகும் இப்படித் துண்டு போட்டால் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அது மட்டுமல்ல, (குறுக்கீடு) அண்ணா சாலையில் அண்ணாவுடைய சிலை இருக்கிற இடத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒரு ஊர்வலம் போகிறபோது அண்ணாவைப் பார்க்கக்கூடாது என்பதற்காக, கருப்புத் துண்டை முகத்திலே போட்டுக் கொண்டு போனார்கள். அண்ணாவுக்கு முன்னாலே கருப்புத் துண்டை முகத்திலே போட்டு மூடிக்கொண்டு போனது என்பது, அவர்கள் எவ்வளவு சிறந்த பண்பாளர்கள் என்பதையும் காட்டுகிறது. அப்படிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வராசன், என்ன சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) அது பற்றி எந்த அறிவிப்பையும் எனக்குக் கொடுக்கவில்லை. நீங்கள் கொடுக்காமல், நீங்களாக எதையும் இங்கே கேட்க முடியாது. (குறுக்கீடு) ஏற்கெனவே கொடுத்தவர்களுக்கே நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு அதை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அதை எழுப்ப முடியாது. என்ன கொடுத்தீர்கள்? (குறுக்கீடு) அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) அறிவிப்பே கொடுக்காமல், எழுந்து நிற்பது முறையல்ல,. உட்காருங்கள். (குறுக்கீடு) அறிவிப்பே கொடுக்காமல் எழுந்து நிற்பது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) அறிவிப்பு கொடுக்காமல் இங்கே எழுப்புவது முறையல்ல. உட்காருங்கள்.

(உறுப்பினர் திரு.அ. செல்வராசன், அறையிலிருந்து வெளியேறினார்.)

பரிதி, நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? அறிவிப்பு எதையும் நீங்கள் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) திரு.. பரிதி இளம்வழுதி.

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பிளாக் நகர் குடியிருப்பிலே குடியிருந்து கொண்டிருக்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்பு 9.40 மணிக்கு வந்து கொடுத்தீர்கள், நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று

சொல்லியிருக்கிறேன். புவனேஸ்வரி என்பவரின் குடும்பம் தாக்கப்பட்டதாக (குறுக்கீடு) அதுதான் 9.40 மணிக்குக் கொடுத்தீர்கள். 9½ மணிக்குள் கொடுத்திருக்க வேண்டும். அதனால் நாளை அது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததைத்தான் நான் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) 9.40க்குக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்குத்தான் நான் பதில் சொல்கிறேன். நாளை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டீர்கள். பிறகு அதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு)

திரு இளம்வழுதி: தலைவர் அவர்களே, 1 மணிக்கு முன்னால் கொடுத்தாலும் அரை மணிக்கு முன்னால் கொடுத்தாலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இதுபோல் எடுத்துக்கொள்கிற அளவுக்கு நிலையில் இருந்தால் எடுத்துக் கொள்வேன். நிராகரிக்க வேண்டியதாக இருந்தால் நிராகரித்து விடுவேன். (குறுக்கீடு) அதற்குத்தான் அரை மணி நேரம் முன்னதாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) விதி 55-ல் கொடுத்தால் 7 நாள் கழித்துத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இதை நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அதற்காக 9.40 க்குக் கொடுத்தால் எடுத்துக் கொள்ள முடியாது. விதி அப்படி இருக்கிறது. அரை மணிக்கு முன்னர் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) அனுமதி மறுத்தால் என்ன செய்யமுடியும்? நான் இதற்கு அனுமதி மறுக்கவில்லை. அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடு) 9.40க்குக் கொடுத்ததால்தான் இன்றைக்கு எடுக்கவில்லை, நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) திரு. எஸ். ஆண்டித்தேவர்.

முற்பகல் 11-25

5. அறிவிப்புகள்

(அ) திரு. சி. ஞானசேகரன் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டது குறித்து

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இதற்கு முன்னால் இரண்டு முறை வெளியேற்றப் பட்டிருக்கிறார். இன்றும் நீங்கள் வெளியேற்றி இருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய விதியின்படி அவர்மீது நடவடிக்கையெடுக்க கேட்டுக் கொள்கிறேன்.